# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 24 | 07-05-2003 | புதன்கிழமை | ஓசை 78



வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical
கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.
வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (சி-7864)


# தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன்

# யப்பான் விசேட தூதுவர் இன்று சந்திப்பு!

## சமாதானப் பேச்சுவார்த்தைகள், டோக்கியோ மாநாடு என்பவை குறித்து முக்கியமாக ஆராயப்படும்

(அலுவலக செய்தியாளர்)

யப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி தலைமையிலான யப்பானின் ஏழு பேர்கொண்ட தூதுக்குழுவினர் இன்று தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் தலைமயிலான விடுதலைப்புலிகளின் நால்வர் கொண்ட குழுவினரைச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தவுள்ளனர். இச்சந்திப்பின் போது தற்பொழுது இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சு வார்த்தை தொடர்பாகவும் டோக்கியோ உதவி வழங்குவோர் மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங் கேற்பது குறித்தும் பேசப்படும் என்று தெரியவருகின்றது.





யப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி அவர்கள் உட்பட ஏழு பேர்கொண்ட குழுவினர் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

யப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி இலங்கைக்கான யப்பானியத் தூதுவர் சிசிரோ ஓட்சுகா, யப்பானிய வெளியுறவு அமைச்சின் தென்மேற்கு ஆசிய விவகாரங்களுக்கான அதிகாரிகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பிரி. தூதுவர் மகிழ்ச்சி

(திருகோணமலை)

திருகோணமலை-மூதூரில் தற்போது இயல்புநிலை ஏற்பட்டுள்ளது தொடர்பாக பிரித்தானியத் தூதுவர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார். மூதூர்ப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து அங்கு நேரடி விஜயம் ஒன்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இராசிக்குழு உறுப்பினர் காயம்

மட்டக்களப்பு - புதுநகர் - திமிலை வீதியில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் சிறிலங்காப் படையினருடன் இணைந்து செயற்பட்டுவரும் இராசிக்குழு உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## எரிக் சொல்கெய்ம், ரெலவ்சன் நாளை வன்னிக்கு வருவர்!

(கிளிநொச்சி)

நோர்வே விசேட தூதுவர் எரிக்சொல்கெய்ம் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புகுழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் ஆகியோர் நாளை வன்னிக்கு வருகை தரவுள்ளனர்.

இவர்கள் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

## முன்னாள் இந்.கடற்படைத் தளபதியின் ஆலோசனை கடலில் யுத்த நிறுத்தம் தொடர்பாக பெறப்படும்

### சிறிலங்காப் பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

(லண்டன்)

போர்நிறுத்த உடன்பாட்டை கடற்பரப்பில் செயற்படுத்துவது தொடர்பாக இந்திய கடற்படையின் முன்னாள் தளபதி பி.ஜே.ஜேக்கப் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கவுள்ளார் என்று சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் போதே பிரதமர் இதைக் கூறியுள்ளார்.

கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையே கடற்பரப்பில் மோதலைத் தவிர்க்கும் நோக்கில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்டிருந்த அறிக்கையின் பின்னணியிலேயே முன்னாள் இந்திய கடற்படைத்தளபதியின் ஆலோசனை பெறப்படவுள்ளது என்றும் பிரதமர் ரணில் தமது உரை

(08ஆம் பக்கம் பார்க்க)

### உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான

## இறுதி அறிக்கையுடன் நம்பியார் கொழும்பு வந்தார்!

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய்ந்து தயாரித்த இறுதி அறிக்கையுடன் இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியார் கொழும்பிற்கு வந்துசேர்ந்துள்ளார்.

நேற்றுமாலை 2.30 மணிக்கு கொழும்பிற்கு வந்து சேர்ந்துள்ள இவர்உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான சிபார்சினை முன்வைக்கவுள்ளார்.

நேற்று சிறிலங்கா பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய முன்னாள் இராணுவத்தளபதி சதீஸ் நம்பியார் உயர்பாதுகாப்பு வலயம் குறித்த தனது சிபாரிசு அறிக்கையைச் சமர்ப்பிப்பார் என்றும் இது குறித்து அவர் சனாதிபதியையும் தன்னையும் சந்திப்பார் என்றும் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச சமூகத்தின் தீவிரகவனம் சமாதான முயற்சிகளில் செலுத்தப்படுகிறது

### ஜப்பானிய விசேட பிரதிநிதி யசுகி அகாஷி

சர்வதேச சமூகத்தின் தீவிர கவனம் இலங்கையின் சமாதான முயற்சியில் இப்போது செலுத்தப்படுவதாக ஜப்பானின் விசேட பிரதிநிதி யசுகி அகாஷி கூறியுள்ளார்.

மூதூரில் கூட்டம் ஒன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

சமாதானத்திற்கான பாதையில் நடைபோடுவது கடினம் எனவும், பாரிய புரிந்துணர்வுடன் இப்பாதையில் காலடி எடுத்து வைக்கவேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஜப்பான் தொடர்ந்து இலங்கையின் அபிவிருத்திக்கும் சமாதான முயற்சிக்கும் உதவி வழங்கும் என்றும் அவர் கூறினார். ஜப்பானின்

(08ஆம் பக்கம் பார்க்க)





நிலாவெளியில் 22 மாவீரர்கள் நினைவாக நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்ட நினைவுத்தூபியையும், நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர் ஈகச்சுடர் ஏற்றுவதையும் படங்களில் காணலாம்.

## புலிகள்–முஸ்லிம் பிரதிநிதிகள் இன்று அம்பாறையில் சந்திப்பு

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று இன்று அம்பாறை மாவட்டத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையிலும் நெல்வயல்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத்தீர்வு காணும் வகையிலும் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அனுசரணையுடன் ஆலடி வேம்பு பிரதேச செயலக மண்டபத்தில் இச்சந்திப்பு இடம் பெறவுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் நடமாட்டமுள்ள இடங்களில் கழிவுப்பொருட்களைப் போடுவதைத் தவிர்க்குக

## தமிழீழ சுகாதார சேவையினர் கோரிக்கை

மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் கழிவுப் பொருட்களைப் போடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர்.

மக்கள் கூடும் இடங்கள், வீதியோரங்கள், நகர்ப்பகுதிகள் ஆகிய இடங்களில் கழிவுப் பொருட்களைக் குவியல்களாக இடுவதனால் பார்வைக்கு அருவருப்பாக இருப்பதோடு நோய்க்கிருமிகள், காவிகள் சொறி விலங்குகள் பெருக்கமடைவதோடு பொதுச்சுகா தாரத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடும். அத்தோடு வீதியோரங்களில் கழிவுப் பொருட்களை இடுவதனால் வீதிவிபத்துக்களும் நிகழ வாய்ப்பாக உள்ளன.

எனவே மேற்படி இடங்களில் கழிவுகளைப் போடுவதை நிறுத்தி உள்ளூராட்சித்திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள இறுதியகற்றல் பிரதேசத்தில் இறுதியகற்றலை மேற்கொள்ளுமாறும் இதனை மீறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர்.(பா)

## அவசர கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப் பகுதியில் பணியாற்றும் அனைத்து சுகாதார தரிசிப்பாளர்களுக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெறவிருப்பதால் சகல சுகாதார தரிசிப்பாளர்களும் குறிப்பிட்ட ஆவணத்துடன் வருகை தருமாறு சுகாதார தரிசிப்பாளர் சங்கம் வேண்டியுள்ளது. (லோ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

கிளிநொச்சிமாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்று முதல் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன்போது துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் வாகனங்களின் மூலம் கழிவுப் பொருட்கள் மற்றும் நீர்தேங்கி நிற்கக் கூடிய அனைத்துப் பொருட்களும் நகரப் குதியில் இருந்து அகற்றப்பட்டு உமையாள் புரம்பகுதில் தீவைத்து அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் வர்த்தக நிறுவனங்கள், வீடுதோறும் சென்று டெங்கு சம்பந்தமான கருத்தூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன. விழிப்புணர்வு துண்டுப் பிரசாரங்களும் வழங்கப்பட்டதையும் காணமுடிந்தது. மேற்படி நடவடிக்கை கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி சுயந்தன் தலைமையில் நடை பெற்றது. இவ் ஒழிப்பு நடவடிக்கை கிளிநொச்சி சுகாதார பணிமனைப் பூச்சியியல் ஆய்வுப் பகுதி. கரைச்சிப்பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்றது. அத்துடன் கிளிநகரப் பகுதியில் பூச்சி ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் தொடர்ச்சியாக இன்றும் இந்நடவடிக்கைகள் இடம்பெறும். (லோ)

# தொழில் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் தேவை அரசாங்கத்திற்கு இல்லை

## அமைச்சர் மகிந்த சமரசிங்க

தொழில் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் தேவை அரசாங்கத்திற்கு இல்லையென தொழில் வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.இதனால் பாராளுமன்றத்தில் இந்த நோக்கத்திற்காக தற்போதைய அரசு சட்டமூலம் எதனையும் சமர்ப்பிக்க மாட்டாது என அவர் பாராளுமன்றில் நேற்று உரையாற்றியுள்ளார். தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்து வசதிகளை அதிகரிப்பது அரசின் நோக்கம் எனக் கூறியுள்ளார். பாராளுமன்றத்தில் வினா ஒன்றிற்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## மாலைதீவு சனாதிபதி கொழும்பு வருகை

மாலைதீவு சனாதிபதி மகமூத் அப்துல் ஹயூம் அவரது பாரியாரும் நேற்று கொழும்பு வந்தடைந்துள்ளனர்.

### பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில்

# பிரதான வீதியின் ஓரங்களில் கட்டடங்கள் அமைக்கத்தடை

(அலுவலக செய்தியாளர்)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிரதான வீதியோரங்களில் கட்டடங்கள் அமைப்பதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் ஏ-9 பிரதான வீதியின் மத்தியிலிருந்து 67 அடி தொலைவிலேயே எந்தக் கட்டடத்தையும் அமைக்குமாறும் மீறி அமைக்கப்படும் கட்டடங்கள் அனைத்தும் சட்டவிரோத கட்டடமாகக் கருதப்பட்டு அழிக்கப்படும் எனவும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

தமது நடைமுறைகளை மீறிப் பலர் கட்டடங்களை அமைத்துள்ளதாகவும் அக்கட்டடங்கள் அழிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். எனவே மேற்படி நடைமுறைகளைக் கருத்திற்கொண்டு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் செயற்பட வேண்டும் எனவும் பிரதேச செயலர் வேண்டியுள்ளார். (லோ)

# பளைக் கல்விக் கோட்டத்தில் புதிய பாடசாலை ஆரம்பம்

பளைக் கல்விக் கோட்டத்தில் புதிய பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் கீழ் இயங்கும் பளைக் கோட்டத்தில் உள்ள அரசங்கேணியில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள இப்பாடசாலை, தரம் 01 முதல், தரம் 5 வரையும் இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதுவரை காலமும் இப்பகுதியில் உள்ள மாணவர்கள் இப்பகுதியில் இருந்து 3.கி.மீ தூரத்தில் உள்ள பளை மத்திய கல்லூரிக்கே செல்ல வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

# சீருடை பெறாத மாணவர்கள் உடன் பெற்றுக்கொள்க

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை சீருடைத்துணிகளைப் பெறாத மாணவர்களை தமது சீருடைத்துணிகளை எதிர்வரும் 15.05.2003 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

சீருடைக்கு விண்ணப்பித்த பிரதேச செயலர் பிரிவுகளில் தங்களுக்குரிய கூப்பன்களைப் பெற்று சீருடைகளைத் தமது பகுதிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுக்கொள்ளுமாறு கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் கேட்டுக் கொள்கிறார். (லோ)

# இணக்க சபைகள் சட்டமூலம் பாராளுமன்றில் நிறைவேறியது

பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான இணக்க சபைகள் விசேட நகல் சட்ட மூலம் நேற்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் லொக்குபண்டார குறிப்பிட்ட நகல் சட்டமூலத்தில் உள்ள பிரமாணங்கள் பிணக்குகள் குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் குறித்து நீதி மன்றத்தில் செய்யப்படாமலேயே இணக்க சபைகள் மூலம் தீர்க்கப்படும் வாய்ப்பை வழங்கும் என கூறியுள்ளார்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவருக்கு உளவியல் சார்ந்த கல்வி

## ஜி.ரி-சற் நிறுவனம் நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப்பிரதேசத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்கண்டு ஜீ.ரீ.சற் நிறுவனம் உளவியல்சார்ந்த கல்வியை ஆரம்பிக்கவுள்ளது.

இவ்வாறு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை இனங்கண்டு உளவியல் சார்ந்த கல்வியை வன்னிப்பாடசாலைகளில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# இரணைமடுக் குளத்தின் திட்டக் குழுக் கூட்டம்

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் திட்டக்குழுக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற இக்கூட்டத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு வளமாக நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் தற்போது இருநூறு ஏக்கர் மாத்திரம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கடந்த ஏப்ரல் மாதம் 30 முதல் கால்நடைகள் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது எனவும் நெற் செய்கைக்கான இறுதித்திகதி இம் மாதம் 30ஆம் திகதி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் திட்டக்குழுத் தலைவர்கள் கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (பா)

# நிதியொதுக்கீடு இல்லை; கட்டட வேலைகள் நிறுத்தம்!

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய் கல்வி வலய கட்டட வேலைகள் இவ்வாண்டிற்கு நிதியொதுக்கீடு செய்யப்படாமையால் அரைகுறையாக இருக்கின்றன. கடந்த ஆண்டு துணுக்காய் கல்வி வலயக் கட்டடத்துக்கான நிதியாக 1.3 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.

துணுக்காய் கல்வி வலயம் மாங்குளத்தில் அமைப்பதற்காக மேற்படி நிதி ஒதுக்கப்பட்டது. இந் நிதிக்கான வேலைத் திட்டங்கள், நிறைவேற்றப்பட்டதோடு இவ்வாண்டு நிதியொதுக்கப்படாத நிலையில் வேலைத் திட்டங்கள் பூர்த்தியடையாதுள்ளது எனவும் தெரிய வருகின்றது. (பா)

# பிறப்பு இறப்பு பதிவுகளை மேற்கொள்க

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை காலமும் இறப்பு மற்றும் பிறப்புப் பதிவுகளை மேற்கொள்ளாத அனைவரும் தங்கள் தங்கள் பிரதேச செயலகங்களில் எதிர்வரும் 20.05. 2003 க்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகம் அவர்கள் கேட்டுள்ளார். (லோ)


## கிளிநொச்சி மாவட்ட சுகாதார திணைக்களத்தில் உள்ள சாரதிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்பும்பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் சாரதிகளை ஆட்சேர்த்தல்

கிளிநொச்சி மாவட்ட சுகாதார திணைக்களத்தில் உள்ள சாரதிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்பும்பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்குரிய நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 17-05-2003ந் திகதியன்று காலை 10.00 மணியளவில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது. கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகள் உடையவர்கள் அவற்றுக்குரிய மூலப்பிரதிகளுடன் ஒவ்வொரு நிழற்படப் பிரதிகளையும் கொண்டு நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றும் வண்ணம் வேண்டப்படுகின்றீர்கள்.

- 03 வருடத்திற்குக் குறையாத சாரதியத்திற்கான அனுபவம்.
- சாரதி அனுமதி பத்திரம் வைத்திருத்தல்.
- வயதெல்லை :- 20 தொடக்கம் 45 வரை.
- கல்வித்தகைமை :- 08ம் தரம் சித்தியடைந்திருத்தல்.
- வதிவிட அத்தாட்சிப்பத்திரம்.
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
- தேசிய அடையாள அட்டை.
- நற்சான்றிதழ்.

வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி,
மா.சு.சே.பி.பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி 3109)



## விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### பழைய ரயர், அதனோடிணைந்த பொருட்கள் பாவித்த பற்றறி பகிரங்க ஏலம்

01. சப்பர் மில்லர் MRF 9-00-20-14PLY - 07
02. ரியூப்கள் - 07
03. பட்டிளர்கள் - 07
04. பாவித்த பற்றறி - 02

விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான மேற்படி பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. இப் பொருட்களை சங்கத்தின் தலைமைப் பணிமனையில் வேலை நாட்களில் பார்வையிடலாம். கூடிய ஏல விலையில் பொருட்களைப் பெற்றுக் கொள்பவர் உடனடியாகப் பெறுமதியினைச் செலுத்துதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| ஏலத்தில் விடப்படும் திகதி | - | 20.05.2003 (செவ்வாய்க்கிழமை) |
| நேரம் | - | மு/ப 10.00 |
| இடம் | - | சங்க தலைமைப்பணிமனை |

தலைவர்/பொதுமுகாமையாளர்,
விசுவமடு விவசாயிகள்.
ப.நோ.கூ.சங்கம், விசுவமடு.

(3190)

# இந்தியாவுடன் அமைதிப் பேச்சுக்கு அனைத்துக் கட்சிகளும் அங்கீகாரம்!

## -காஷ்மீர் விடயத்தில் விட்டுக்கொடுப்பு இல்லை


(இஸ்லாமாபாத்)

**இந்தியாவுடன் அனைத்து விடயங்கள் குறித்தும் பேச்சுக்களை நடத்துவதற்கு பாகிஸ்தான் பிரதமருக்கு அந்நாட்டு அரசியல் கட்சிகள் அனைத்தும் ஏகமனதாக அங்கீகாரத்தை வழங்கியுள்ளன. நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று அதிகாலை வரை இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த அங்கீகாரம் அளிக்கப்பட்டது.**

பாகிஸ்தான் பிரதமர் ஜபருல்லாகான் ஜமாலி பாகிஸ்தானின் அனைத்துக்கட்சிகளின் கூட்டமொன்றைக் கூட்டியிருந்தார். இதில் காஷ்மீர் உட்பட இரு தரப்பும் முக்கியமென கருதும் விடயங்கள் குறித்துப் பேச்சுக்களை நடத்துவதற்கான அதிகாரத்தை பிரதமர் ஜமாலிக்கு இக்கட்சிகள் வழங்கின.

இங்கு உரையாற்றிய பிரதமர் ஜமாலி பேச்சுக்கான முயற்சிகள் எவ்வித நெருக்குதல்களுக்கும் உட்பட்டு மேற்கொள்ளப்பட மாட்டாது என வலியுறுத்தியதோடு, நாட்டின் அடிப்படை நிலையைப் பொறுத்து விட்டுக் கொடுக்கும் போக்கு இருக்காது என்றும் உறுதி கூறினார்.

காஷ்மீர் விடயத்தில் பாகிஸ்தான் ஒருபோதும் விட்டுக்கொடுக்காது. அந்நிய நெருக்குதலையும் ஏற்காது. பேச்சு நடத்தும் முக்கிய நோக்கம் மேம்பட்ட வருங்காலத்தை ஏற்படுத்துதல் ஆகும். இரு நாடுகளினதும் உறவில் ஏற்படும் முன்னேற்றம் நிரந்தர அமைதியை ஏற்படுத்த வாய்ப்பாகக் கருதப்படவேண்டும் என்பதையும் அவர் அப்போது வலியுறுத்தினார்.




16பேரைப் பலிகொண்ட ஆர்ஜென்டீனா வெள்ளப் பெருக்கில் "சாந்தா பே" விளையாட்டு மைதானம் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது.



பாக்தாத்தில் எரிபொருள் நிலையமொன்றில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கப் படைவீரருடன் வாக்கு வாதப்படும் ஈராக்கிய இளைஞன்.

# அரசியல் பிரச்சினைகளுக்கு முடிவு காண 3 நாடுகளின் சனாதிபதிகள் சிம்பாவ்வே பயணம்

சிம்பாவ்வேயின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் மூன்று ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் சிம்பாப்வேக்கு விஜயம் செய்துள்ளனர்.

தென்னாபிரிக்க சனாதிபதி, நைஜீரிய சனாதிபதி, மலாபே சனாதிபதி ஆகியோர் அடங்கிய குழுவே நேற்று முன் தினம் சிம்பாப்வே சனாதிபதியைச் சந்தித்து இரண்டு மணிநேரம் பேச்சுவார்த்தையை நடத்தி உள்ளது.

அடுத்த தேர்தலுக்கு முன்னர் தான் அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாக சிம்பாப்வே சனாதிபதி அறிவித்துள்ள நிலையில் ஆபிரிக்க தலைவர்களின் விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது.

இதேவேளை சிம்பாவ்வேயின் பிரதான எதிர்க்கட்சியான எம்.பி.சி. கட்சியின் தலைவரையும் ஆபிரிக்க தலைவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

# சூரியனுக்கும் பூமிக்குமிடையே புதன் கிரகம் இன்று பிரவேசம்!

புதன் கிரகம் இன்று சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் நேர்கோட்டில் வரவுள்ளது.

தமிழீழ நேரப்படி காலை 10.42 க்கு இந்த அதிசயம் நிகழவுள்ளது. அப்போது புதன் சூரியனை கடக்கத்தொடங்கு கின்றது. மாலை 6.30க்கு சூரியனை அது கடந்து செல்லும். காலை 10.42 மணிதொடக்கம் மாலை 4.02மணி வரை இந்த அரிய காட்சியைக் காணலாம் இந்த நேரத்தில் சூரிய வட்டத்துக்குள் ஒரு புள்ளி போல புதன்காட்சி யளிக்கும்

இதை வெறும் கண்களால் பார்க்கக்கூடாது தொலைநோக்கி மூலமும் பார்க்கக்கூடாது. இவ்வாறு செய்தால்கண்ணுக்கு பாதிப்பு ஏற்படும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சூரிய விம்பத்தை ஒரு திரையில் விழச் செய்து பார்ப்பது பாதுகாப்பானது கடந்த நூறு ஆண்டுகளில் 14 தடவை இத்தகைய காட்சி இடம் பெற்றுள்ளது.

# வாஜ்பாயின் நல்லுறவிற்கு பால்தக்கரே கண்டனம்!

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள பிரதமர் வாஜ்பாய் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை சிவசேனா கட்சித் தலைவர் பால்தக்கரே கண்டித்துள்ளார்.

இந்தக் கட்சியின் அதிகார பூர்வ நாளேட்டின் மூலம் அவர் இந்த கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

அயல்நாட்டின் நட்புறவை கருத்தில் கொண்டு அந்த நாட்டிடம் காஷ்மீரை ஒப்படைக்கக் கூடாது.

பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதம் தொடர்ந்து நீடித்துவரும் நிலையில் அந்த நாட்டுடன் நேசக்கரம் நீட்ட வேண்டியதன் அவசியம் என்ன?

பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் அந்நாட்டின் பிரதமர் மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் அரசியல் புரிந்துவருகின்றார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




பாக்தாத்தில் தீப்பிடித்த எரிபொருள் நிலையத்துக்கு அருகே அமர்ந்திருக்கும் அமெரிக்க இராணுவ வீரர்

## விபத்தில் சிக்கினர்!

ரஷ்யாவில்காட்டுத்தீயை படம் பிடிக்கச் சென்ற உலங்குவானூர்தி விபத்திற்குள்ளானதில் அதில் பயணம் செய்த 12 பேரும் உயிரிழந்துள்ளனர்.

ஊடகவியலாளர் நால்வரும், விமானி ஒருவரும் ஏழு தீயணைப்புப் படை வீரர்களுமே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்யாவின் சிட்டாபகுதியில் கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.




கடற்கரைகளை சுத்தம் பேணும் இயக்கத்தின் ஏற்பாட்டில் டோக்கியோவில் விளம்பரம் ஒன்றினை வடிவமைக்க இயந்திரம் ஒன்று பாரிய ரோலர் ஒன்றை இழுத்துச் செல்கிறது.



ஜகார்த்தா விமானப்படை முகாமில் நடைபெற்ற வானொலிக் கருவியைப் சோதனை நிகழ்வில் தமது கருவியை பரிசோதனை செய்யும் இந்தோனேசிய விமானப்படை வீரர்.



ஜப்பானில் பிரபல்யமாகக் கருதப்படும் நீர்வாழ் உயிரினமான "டமா–சன்" கரையில் ஓய்வெடுக்கிறது.

# எதிர்பார்ப்பிற்கு மாறாக 'சார்ஸ்' கொடுமையானது!

## - சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

தொடுவதின் மூலம் கூட 'சார்ஸ்' நோய் பரவும் என மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

எதிர்பார்த்ததைவிட சார்ஸ் நோய் கொடுமையானது என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இந்த நோய் பற்றி மேலும் பல தகவல்களையும் சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ளது.

சார்ஸ் நோய்க் கிருமிகள் வெளிப்பரப்பில் 24மணிநேரம் உயிர்வாழும். ஆனால் மனிதக் கழிவுகளில் இது நான்கு நாட்கள் உயிர்வாழும்.

சார்ஸ் நோய்க் கிருமிகள் உறை நிலையிலும் வாழும் தன்மை கொண்டன. நோய்க் கிருமிகளை அழிக்க பயன்படுத்தப்படும் சவர்க்காரம் போன்றவற்றால் சார்ஸ் நோய்க் கிருமிகளை அழித்து விட முடியாது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் அரங்கிற்கு வரும் சிஹல உறுமய...

**வேலவன்**

கடந்த தேர்தலின் போது சிங்கள மக்களால் புறக்கணிக்கப்பட்ட இனவாதக்கட்சியான சிஹல உறுமய மீண்டும் அரங்கிற்கு வந்துள்ளது "தேசப் பிரேமி" அரசு அமைப்பது பற்றியும் அதற்காக 18முதல் 55வயது வரையான சிங்கள மக்களுக்கு ஆயுதப்பயிற்சி அளிப்பது பற்றியும் அதற்கும் மேலாக புலிகளுக்கு எதிரான தற்கொலைப் படையொன்று தயார் நிலையில் இருப்பதாகவும் அது அறிவித்திருக்கிறது. இந்தத் தற்கொலைப் படைதொடர்பான விபரம் கடந்த வாரம் வெளிவரும் எனக் கூறியபோதும் அவ்வாறு எதுவும் வெளியிடப்பட்டதாகத் தெரியவரவில்லை.

"எமது ஆயுதம்- வன்முறையற்ற ஜனநாயகம் -அதன் மூலம் எமது இலட்சியத்தை அடைவோம் " என்று சிஹல உறுமயவின் உத்தியோக பூர்வ இணையத்தளம் கூறுகையில், அதன் நிறுவுனரான சம்பிக்க ரணவக்க மேற்படி படை திரட்டல் பற்றி கூறியிருக்கிறார்.

அவர் ரணில் விக்கிரமசிங்க,ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோரை ஓரங்கட்டிவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள "தேசபக்தர்கள்" பொதுசன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் தம்முடன் ஒன்றிணைந்து



திலக் கருணாரத்ன

"தேசபக்தர்களின் ஆட்சி" ஒன்றை அமைக்க அறைகூவல் விடுக்கின்றார்.

சிஹல உறுமய இது போன்றதொரு அழைப்பை விடுவது இது தான் முதற்தடவையல்ல. பொது சன ஐக்கிய முன்னணி பாரிய தொடர்யுத்தமொன்றை நடத்தித் தோல்வியைத் தழுவிக்கொண்டிருந்த நிலையிலும் இவ்வாறான அழைப்பொன்றை விடுத்தது. தாம் கூறும் சில நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டால் - ஏற்றுக்கொண்டால் படைதிரட்டல் ஒன்று செய்து யுத்தத்திற்குத் தேவையான ஒருலட்சம் சிங்கள இளைஞர்களைத் தரத்தயார் என்றும் அறிவித்தது. ஆனால் சிங்கள மக்கள் அதற்குத் தயாராக இல்லை என்பது புலப்படுத்தப்பட்டது.

சிங்கள மக்கள் அமைதியை நாடியமையைக் கடந்த தேர்தல் நிரூபித்தவேளையில், கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக குரலடங்கிப்போயிருந்த சிஹல உறுமய போன்ற இனவாத சக்திகள் இப்பொழுது மீண்டும் அரங்கிற்கு வந்திருக்கின்றன.

உயர்பாதுகாப்பு வலயங்கள், கடலில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள், விடுதலைப்புலிகளை சம அந்தஸ்துள்ள பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளுதல், போரினால் அழிந்து போன வடக்கு கிழக்கு மாகாணத்தைப் புனரமைப்புச் செய்தல் ஆகிய நான்கு விடயங்கள் தொடர்பாக சிஹல உறுமயவின் அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க புதிய விளக்கங்களை வழமை போலவே முன்வைத்திருக்கிறார்.

2002 பெப்ரவரியில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் அதற்குப் பின்னர் இடம்பெற்ற ஆறுசுற்றுப் பேச்சுக்களிலும் இணக்கம் காணப்பட்ட விடயங்களுக்கும் மேலாகப் புலிகள் எதனையும் வலியுறுத்தவில்லை என்பது அனைவராலும்ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும் இன்னமும் நிறைவேற்றப்படாத விடயங்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அரசாங்கம் ஒப்புக்கொள்வதும் இதனையே வெளிப்படுத்துகிறது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தமும் சரி, சமாதான நடவடிக்கைகளும் சரி புலிகள் தமது பலத்தையும், தமது போராட்டத்தின் நியாயத்தன்மையையும் அதற்கு தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஆதரவையும் நிரூபித்துக் காட்டிய பின்னரே இடம் பெற்றன. புலிகள் எப்பொழுதுமே இவ்வாறானதொரு சமாதான முயற்சிகளுக்குத் தயாராக இருந்தவேளையிலும் கூட யுத்தத்தை நடத்திய சிங்கள ஆட்சியாளர்கள் இறுதியில் யுத்தத்தில் முற்றுமுழுதாகத் தோல்வியடைந்த நிலையிலேயே சமாதான முயற்சிகளுக்கு முன்வந்தனர்.

இலங்கைத்தீவின் எதிர்காலம் குறித்த கேள்விக்குறி - அதாவது இரண்டு நாடுகளா? ஒரு நாடா? - பலமாக எழுந்த வேளையிலேயே சிங்கள மக்கள் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்கினர். இவ்வாறான நிலையில் தேசபக்தர்களின் ஆட்சியையமைக்கப் போவதாகக் கூறும் சிஹலஉறுமய தேசத்தை மேலும் அழிக்கும் நடவடிக்கையில் இறங்கவே தயாராக உள்ளது.

சிஹலஉறுமயவின் தோற்றமானது ஒரு கற்பனாவாதத்தின் அடிப்படையில் எழுந்ததாகும்: அதாவது அது முன்னர் வழமையாக மேடையில் செய்யும் பிரச்சாரம் என்ன வென்றால் "தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இருக்கிறார், மலையக மக்களுக்காகக் குரல் கொடுக்க தொண்டமான் இருக்கிறார், முஸ்லிம் மக்களுக்காகக் குரல் கொடுக்க அஷ்ரப் இருக்கிறார் ஆனால் அப்பாவிச் சிங்கள மக்களுக்காகக் குரல் கொடுக்க எவருமே இல்லை" என்பதாகும்.

இவர்கள் சிங்கள ஆணைக்குழு ஒன்றை அமைத்துச் சுதந்திரத்திற்குப் பின் சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக ஆராய்ந்தார்கள். ஆனால் சுதந்திரத்திற்குப்பின் ஆட்சி அதிகாரம் சிங்களவர்களின் கைகளிலேயே இருந்தது. இதன் காரணமாக ஏனைய இன மக்கள், கொடூரமான ஒடுக்கு முறைக்கு இலக்கானார்கள். அமைதி வழியில் உரிமை கேட்டுப் போராடிய தமிழ் மக்கள் ஆட்சியாளர்களால் கொடூரமாக ஒடுக்கப்பட்டார்கள். காலத்துக்குக் காலம் அவர்கள் மீது இன வன்முறைகள் கட்ட விழ்த்து விடப்பட்டன. பொருளாதாரம், கல்வி என முக்கிய விடயங்களில் தமிழ் மக்கள் பெரும் ஒதுக்கலுக்கு உட்பட்டார்கள். இதன் காரணமாகவே தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினர் என்பதெல்லாம் வரலாற்று உண்மைகளாகும்.

போராட்டம் நடத்திய மக்கள் மீது கடந்த 20 வருடங்களாகப் பாரிய யுத்தம் திணிக்கப்பட்டது. பொருளாதாரத் தடை, மீன்பிடித்தடை என பல்வேறு தடைகள் இம்மக்கள் மீது சுமத்தப்பட்டன. குண்டு வீச்சுகள், எறிகணைகள் மூலம் தமிழ் மக்களின் பெருமளவு சொத்துக்கள் அழிக்கப்பட்டன. மக்களின் குடியிருப்பு நிலங்கள் விளை நிலங்கள், ஆக்கிரமிக்கப்பட்டு விரட்டப்பட்டார்கள். தமிழ் மக்களின் அன்றாட வாழ்வே சீர் குலைந்தது.

இவ்வாறு தமிழ் மக்கள் கொடூரமாகச் சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் தான் சுதந்திரத்திற்குப் பின் சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து சிங்கள ஆணைக்குழு விசாரித்துக் கொண்டிருந்தது. இதிலே ஓய்வு பெற்ற நீதிபதிகள், கல்விமான்கள், அரசியல்வாதிகள், இராணுவத்தளபதிகள் என பலதரப்பட்டவர்களும் பங்குபற்றிக் கொண்டிருந்தனர்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் தமிழ் மக்கள் மீது ஏவி விடப்பட்ட "சமாதானத்துக்கான யுத்தம்" தீவிரமடைந்து மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கையில் - வன்னி மீது மருந்துப் பொருட்களுக்குக் கூடத் தடை விதிக்கப்பட்டிருக்கையில், சிஹலஉறுமயவின் தலைவர் அப்பகுதிக்கு உணவு மருந்து உட்பட அத்தியாவசியப் பொருட்கள் அனுப்புவதை முற்றாகத் தடை செய்ய வேண்டுமென்று கோரினார்.

ஆனால் இத்தடைகள் எல்லாவற்றையும் உடைத்து விடுதலைப்புலிகள் ஆக்கிரமித்த இராணுவத்தையும் பல பகுதிகளிலிருந்து விரட்டினர். குறிப்பாக வன்னியின் பெரும்பகுதியிலிருந்தும் ஆனையிறவுப் பெருந்தளத்திலிருந்தும் ஓயாத அலைகள்-03 மூலம் இராணுவம் முற்றுமுழுதாக விரட்டப்பட்டமையானது. விடுதலைப்புலிகள் அமைப்பையும் விடுதலைப் போராட்டத்தையும் உலக அரங்கில் வெல்ல முடியாதவையாக வெளிக்காட்டின.

இவ்வாறான நிலையில் தான் சிங்கள மக்கள் சமாதானத்துக்கான ஆதரவை வழங்கினர். இவ்வேளையில் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்ட சிஹலஉறுமய இப்பொழுது முன்வைக்கும் பிரசாரமும் வலுவானதல்ல. அதாவது தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை, யுத்தத்தால் அழிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்புச் செய்தல்



சம்பிக்க ரணவக்க

மக்களின் மீள்குடியேற்றம் என்பனவெல்லாம் சமாதான முயற்சிகளைத் தொடர அத்தியாவசியமானவை என்பது சகலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

இது தொடர்பான நடவடிக்கைகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக மேற்கொள்பவர்கள் விடுதலைப்புலிகளாகும். அவர்கள் சம அந்தஸ்துடையவர்கள் என ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும். பின்னர் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவது மறுதரப்பாகிய சிறிலங்கா அரசாங்கத்தின் கடமையாகும். இதனையே புலிகள் வலியுறுத்துகின்றனர். ஆனால் சிஹலஉறுமய போன்ற இனவாதக் கட்சிகள் இவையெல்லாம் புதியவை போலவும், நியாயமற்ற கோரிக்கை போலவும் காட்ட முயல்கின்றன. இவ்வாறான பிரச்சாரத்தின் மூலம் தம்மைத் தேச பக்தர்கள் போலக் காட்டிக் கொள்ளவும் முயல்கின்றனர்.

உண்மையில் நாட்டில் இவர்களுக்கு அக்கறையிருக்குமாக இருந்தால் யுத்தத்தை நோக்கி கூச்சலிடுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

இதேவேளை 1994இல் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்கு வந்தபோது அதாவது 1994 ஆகஸ்ட் தேர்தலில் இனவாத சக்திகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டதாக, புத்திஜீவிகள் தெரிவித்திருந்தனர். ஆனால் பின்னர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகள் அவர் யார் என்பதை வெளிப்படுத்தின.

அவர் நடத்திய யுத்தம் வளர்த்துவிட்ட இனவாத சக்தியே சிஹலஉறுமய ஆகும். அது தோற்றம் பெற்று சில மாதங்களில் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு ஒரு பாராளுமன்ற உறுப் பினரைப் பெற்றது. பின்னர் ஏற்பட்ட சூழ்நிலை அதனைப் பின் தள்ளியது. மீண்டும் இப்பொழுது உருவாகியுள்ள சூழ் நிலையில் மீண்டும் தலை தூக்கப் பார்க்கிறது. படை திரட்டல் பற்றியும், தற்கொலைப் படை பற்றியும் பேசுகிறது.

இதற்குக் காரணம் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையாகும். புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும், பின்னர் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களிலும் எட்டப்பட்ட முடிவுகளை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் குறிப்பிட்ட காலத்திற்கும் நிறைவேற்றியிருக்குமாயின் இவ்வாறானதொரு தேக்க நிலை ஏற்பட்டிருக்காது. சிஹலஉறுமய போன்ற இனவாத சக்திகளும் தலை தூக்கியிருக்கமாட்டாது.

"சமாதானத்துக்கான யுத்தம்" மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையில் செல்வாக்குடன் வளர்ந்த சிஹலஉறுமய இச்சமாதான காலத்தில் மீண்டும் புத்துயிர் பெற அனுமதித்தால் சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் ஒன்றாகவே இருக்கும்.

---

# பால் குளிரூட்டும் நிலையம் இயங்குமா? பால் உற்பத்தியாளர்கள் கேள்வி?

மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான இலுப்படிச்சேனையில் இயங்கி வந்த பால் குளிரூட்டும் நிலையம் 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட வன்செயலின் போது இடைநிறுத்தப்பட்டது. மீண்டும் இதே இடத்தில் இயங்குமா என இப்பகுதிப் பால் உற்பத்தியாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

உறுகாமம், கரடியனாறு, கோப்பாவெளி, உன்னிச்சை, ஆயித்தியமலை, வேப்பவெட்டுவான், வெளிந்திமடு, கொடுவாமடு, இலுப்படிச்சேனை போன்ற பெரும்பாலான இடங்களிலிருந்து மேற்படி நிலையத்தில் பால் கொடுக்கப்பட்டது. ஆனால் கூடுதலான பால் இக்குளிரூட்டும் நிலையத்தில் கொள்வனவு செய்து சேகரிக்கப்பட்டது. தற்போது இப்பகுதி மக்கள் பல சிரமங்கள் மத்தியில் 6 கிலோ மீற்றர் தூரம் செங்கலடிக்கும், 10 கிலோ மீற்றர் தூரம் சித்தாண்டிக்கும் துவிச்சக்கர வண்டி மூலம் சென்றுபாலைக் கொடுப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.



---

# கவனிப்பாரற்று கிடக்கும் கிளி. பதிவாளர் அலுவலகம்

கிளிநொச்சி மாவட்டத்தின் மிக முக்கிய அலுவலகமான பதிவாளர் திணைக்களம் நிரந்தர கட்டடமின்றி தற்காலிக கட்டடத்தில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றமையினைக் காணக்கூடியதாகவுள்ளது.

சத்ஜெய இராணுவ நடவடிக்கையினால் மேற்படி அலுவலக கட்டடம் அழிக்கப்பட்டதன் பின்னர் இதுவரை நிரந்தரமான கட்டடம் எதுவும் அமைத்துக்கொடுக்கப்படாத நிலையில் ஓலைக்கொட்டிலிலேயே இயங்கி வருகின்றமையினை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அண்மையில் பெய்த மழை காரணமாக ஆவணங்கள் நனையும் அபாய நிலை ஏற்பட்டதுடன் முக்கிய ஆவணங்கள் கறையான் அரிக்கும் நிலையிலும் இருக்கின்றமையினை நேரில் பார்வையிடக்கூடியதாகவிருந்தது.அதுமட்டுமன்றி போதிய தளபாட வசதிகள் இன்றியும் உடைந்த நிலையில் உள்ள தளபாடங்களை கொண்டுமே- மேற்படி அலுவலகம் செயற்பட்டு வருகிறது. கிளிநொச்சி மாவட்டத்தின் காணி மற்றும் திருமண இறப்பு, பிறப்பு பதிவுகள் உட்பட அனைத்து ஆவணங்களும் இவ் அலுவலகத்திலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ. லோ)

# பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை

## டில்லி-கொழும்பு-கிளிநொச்சியில் தீவிர இராஜதந்திர நகர்வுகள்!

தாய்லாந்தில் இடம் பெறவிருந்த ஏழாவது சுற்றுப் பேச்சுக்களில் இருந்தும் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதில் இருந்தும் இடைவிலகியிப்பதாக வெளியான விடுதலைப்புலிகளின் அறிவிப்பைத் தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாகியிருந்த பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான இராஜதந்திர முயற்சி கள் முழு வீச்சில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரத்தின் பிற்பகுதியில் தீவிரம் பெற்ற இவ் இராஜதந்திர நடவடிக்கைகள் இவ் வாரத்தில் உச்சக்கட்டத்தை அடையலாம் என்று எதிர்பார்க்கலாம். இவ் இராஜதந்திர முயற்சியில் சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வே இனப்பிரச்சினைத் தீர்வில் தீவிர அக்கறை காட்டி வரும் யப்பான், என்பன முனைப்புடன் ஈடுபட்டிருக்கையில் கொழும்பு-கிளிநொச்சி-டில்லி என்பனவற்றை மையமாகக்கொண்டதாக இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்வு-சமாதானப்பேச்சுவார்த்தைகள் என்பனவற்றில் இதுவரையில் இந்தியா விலகியிருந்துள்ளபோதும், தற்பொழுது பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முட்டுக்கட்டையைப்போக்குவதற்கு முன்னர் இந்தியாவைப் பங்கு தாரிகளாக்கும் இராஜதந்திர நடவடிக்கை களை நோர்வேயும், யப்பானும் முனைப்புப்படுத்தியிருந்தன இந்நிலையில் கடந்த வாரத்தின் இறுதிப் பகுதியில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான இராஜதந்திர நடவடிக்கைகள் டில்லியில் முனைப்புப் பெற்றதாயிருந்தன.

இதில், நோர்வே அரசின் சார்பில் அதன் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசனும், யப்பான் சார்பில் அதன் விசேட தூதுவர் யசுகி அகாஷியும் சிறிலங்கா சார்பில் புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவும் பங்கேற்றனர்.

ஏப்ரல் மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் இடம்பெற்ற சிறிலங்காவிற்கு உதவி வழங்குவோரின் மாநாட்டிற்கு முன்னோடி மாநாட்டில் இந்தியா கலந்துகொண்டிருந்தமையானது இந்தியா இலங்கையுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருக்க விரும்புவதையே வெளிப்படுத்தியதாக இருந்தது. இந் நிலையில் டில்லியில் கடந்தவாரம் தொடங்கப்பட்ட இராஜதந்திர நடவடிக்கையின் பிற்பாடு -இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தீவிரமாக ஈடுபடவுள்ளதாக கொழும்பிலுள்ள சமாதானச்செயலகம் தெரிவிக்கும் அளவிற்கு இவ் இராஜதந்திர முயற்சி வெற்றிகரமாக அமைந்தது எனக் கூறலாம்.

ஆனால் இந்தியாவின் இந்நிலைப்பாட்டு மாற்றமானது தனியாக நோர்வே, யப்பான் ஆகியவை மேற்கொண்ட தீவிர இராஜதந்திர நடவடிக்கைகளின் காரணமாக ஏற்பட்டதா அன்றி இந்தியா ஏற்கனவே தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளத் தீர்மானித்திருந்த நிலையில், நோர்வே, யப்பான் ஆகியவற்றின் இராஜதந்திர முயற்சிகளை இந்தியா சாதகமாக்கிக்கொண்டதா என்பதற்கு தற்பொழுது பதிலளிக்கமுடியாது.

அத்தோடு, இலங்கை தொடர்பான இந்தியாவின் இம்மாற்றத்தினை விரைவுபடுத்த காரணிகளும் இருக்கவே செய்தன. இதில் கடந்த மாத முற்பகுதியில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்திய விஜயமும் முக்கியமானதாகும் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு எதிரானதொரு அணியை உருவாக்கும் நோக்கினைக் கொண்ட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் திட்டத்தில் கொழும்பு -சென்னை, டில்லி என்பனவற்றைப் பங்குதாரர்களாக ஆக்க முடியும் என்றதாக இருந்தது.

இதேவேளை இந்தியாவை இவ்விவகாரத்திற்குள் இழுத்து விடுவதற்கு கொழும்பிலிருந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் ஓர் அங்கமாகவே கடல் கண்காணிப்பு நடவடிக்கையில் இந்தியாவும் மற்றும் இரு நாடுகளும் பங்கு பற்றவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தியத்தரப்பும் இதனை நிராகரிக்காது சில தினங்களில் பதில் அளிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளமையானது இந்தியா இலங்கை இனப்பிரச்சினையில் இருந்து விலகியிருக்கும் நிலைப்பாட்டை மாற்றம் செய்யத்தீர்மானித்திருந்ததாகவே எண்ண வைக்கின்றது.

இந்திய மத்தியஅரசு இத்தகைய தொரு தீர்மானத்திற்கு - இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் - வந்தமைக்கு பல காரணிகள் இருக்கக்கூடும். குறிப்பாக இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச நாடுகள் காட்டும் அக்கறையானது இந்தியாவை ஓரம் கட்டும் அளவிற்குக் கொண்டுவந்துவிடும் என அது அஞ்சியமை காரணமாக இருக்கலாம். இந்தியா இத்தகைய தொரு தீர்மானத்திற்கு வருவதற்குள் காரணிக ளும் இல்லாமல் இல்லை.

எடுத்துக்காட்டாக, இனப்பிரச்சினை தீர்விற்கான சமாதான முயற்சியில் யப்பான் தீவிரமாக ஈடுபாடு காட்டத்தொடங்கிய போது இந்தியா அதற்கு தமது ஆட்சேபத்தை வெளிப்படையாகவே தெரிவித்திருந்தது. ஆனால் யப்பான் இதனைப் பொருட்படுத்தியதாக இல்லை இந்தியாவின் இவ் ஆட்சேத்தை யப்பான் வெளிப்படையாகவே நிராகரித்ததோடு, சமாதான நடவடிக்கைகளில் தீவிர பங்கேற்கும் முயற்சிகளை மேற்கொண்டே வந்தது

இதன்பின்னர் வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டிற்குமுன்னோடி மாநாட்டிற்குஅமெரிக்காவும் ஏனைய மேற்குலகநாடுகளும் கொடுத்த முக்கியத்துவம், டோக்கியோ மாநாட்டில் அவை செலுத்திவரும் கவனமும் இந்தியாவிற்கு இனப்பிரச்சினை விவகாரத்தில் தாம் விலகியிருப்பது தாம் ஓரம்கட்டப்படுவதற்கு ஏதுவாகிவிடும் என்றதொரு ஐயத்தை ஏற்படுத்தியிருத்தல் கூடும்.

அது மாத்திரமல்ல, ஈராக்மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலானது நாடுகளின் இறைமை, ஐ.நா. சாசனம் என்பவற்றைக்கேள்விக்குள்ளாக்கியுள்ள நிலையில் தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் தலையீடு ஏற்படுத்தப் போகும் அரசியற்சூழ்நிலை மாற்றம் குறித்தும் இந்தியா கவனத்திற்கொள்ள வேண்டியதாகவே உள்ளது. இதன் காரணமாக பாகிஸ்தான், இலங்கை தொடர்பான தமது நிலைப்பாடுகளை இந்தியா மீள் பரிசோதனை செய்யவேண்டிய தொரு சூழ்நிலை உருவாக்கியிருந்ததெனலாம்,

இந்த நிலையில், கடந்தவாரம் இறுதியில் இலங்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர செயற்பாடுகளில் இந்தியா தனது அணுகுமுறையில் மாற்றம் ஒன்றை மேற்கொண்டதாக அனுமானிக்க முடிகின்றது. இதன் பிரகாரம் இனப்பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் பார்வையாளர் என்ற நிலையில் இருந்து பங்கு தாரர்களாக மாறுவதற்கான அடியை அது முன்னெடுக்க வைத்துள்ளது.

ஆனால், இந்தியா இத்தகைய தலையீட்டின் ஊடு மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் எவ்வாறானதாக அமையும் என தற்பொழுது கூறுவது தவறானதாகிவிடும். ஆனால் சமாதான முயற்சிகளில் சிறிலங்காவின் எதிர்க்கட்சிகளின் உணர்வுகளை இந்தியா பிரதிபலிப்பதாக இருப்பின். இதனால் சமாதான முயற்சிகளில் புதிய பல முட்டுக்கட்டைகள் உருவாக வாய்ப்பு ஏற்படக்கூடும்.

இதேவேளை கடந்த வார இறுதியில் டில்லியில் மையங்கொண்டிருந்த இவ் இராஜதந்திரச் செயற்பாடுகள் இவ்வாரத்தின் ஆரம்பத்தில் கொழும்பிலும். நடுப்பகுதியில் வன்னியிலுமாக மேற்கொள்ளப்படுவனவாகவுள்ளன. இதன்பிரகாரம் டில்லியில் இருந்து நேராகக் கொழும்பு வந்துள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கெல்கேசன், விசேட தூதுவர் எரிக்சொல் கெய்ம், ஜப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி ஆகியோர் கொழும்பில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் எனலாம்.

இவ்விரு தரப்பும் ஏற்கனவே பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். அத்தோடு, ஏனைய தரப்பினரோடும் பேச்சுக்களை நடத்தியும் வருகின்றனர்.

ஆனால், கொழும்பில் இவர்களுக்கான இராஜதந்திரப் பணி டில்லியிலும், வன்னியிலும் (கிளிநொச்சியிலும்) காணப்படுவது போன்று கடுமையான தொன்றானதாக இருக்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால், சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்குத் தடையாகவுள்ள சில காரணிகளைப் போக்கவோ அன்றித் தளர்த்தவோ இவர்கள் ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை கூறக்கூடும்.

இதேவேளை எதிர்க்கட்சியினர் மற்றும் ஆளும் கூட்டணியிலுள்ள முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய தரப்புக்களுடன் இவர்கள் பேச்சுக்களையும் சந்திப்புக்களையும் நடத்தக் கூடும். ஆயினும் இவர்களின் நடவடிக்கைகளின் சமாதான முயற்சிகளுக்கு தற்பொழுது உடன் ஊறுவிளைவிக்கக் கூடியதாக இருக்க மாட்டாது. ஆகையினால், அகாஷி போன்றோரின் பணி கொழும்பில் நெருக்கடி மிக்க தொன்றாக இருக்க வாய்ப்பு இல்லை.

ஆனால், வன்னியில் -கிளிநொச்சியில்- இவ்வாரத்தின் மத்தியிலும். இறுதியிலுமாக இவர்கள் மேற்கொள்ளப்போகும் இராஜதந்திர செயற்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகவே இருக்கும். ஏனெனில். அரசின் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவித்து சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தியுள்ள விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு செல்வதாக இவ் இராஜதந்திரச் செயற்பாடு இருத்தல் அவசியமானதாகும்.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியரும், புலிகளின் தரப்புத் தலைமைப் பேச்சாளருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் வன்னி திரும்பியதுமே வன்னியில் இராஜதந்திரப் பணிகள் முனைப்புப் பெறத் தொடங்கிவிட்டதெனலாம். இதில் முதற்பணியாக விடுதலைப்புலிகள் சில முக்கியமான தீர்மானங்கள் எடுக்க வேண்டியதாகியுள்ளது.

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்தியமை தொடர்பாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுதிய கடிதத்திற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எழுதிய பதில் கடிதம் தொடர்பாக தமது நிலைப்பாட்டினைப் புலிகள் வெளியிடவேண்டிய அவசியம் உள்ளது. அதாவது பிரதமர் ரணிலின் கடிதம் தொடர்பாகத் தமது அபிப்பிராயம், அடுத்தகட்ட நடவடிக்கைகளை விளக்க வேண்டிய தேவை உள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது கடிதத்தில் விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்தியமைக்குத் தெரிவித்துள்ள காரணிகள் ஒவ்வொன்றிற்கும் பதில் அளித்துள்ள அதேவேளை புலிகள் தெரிவித்த குற்றச்சாட்டுகளை நிராகரிக்காமலும், அதேவேளை முழுமையாக அவற்றை ஒப்புக்கொள்ளாத வகையிலும் தமது பதில் கடித்தத்தினை எழுதியுள்ளார். அவுரின் கடித்தத்தின் சாராம்சத்தின்படி பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன- அவை முன்னேற்றகரமானவையே. ஆனால், இன்றும் அவை முற்றுப் பெறவில்லை. அவற்றிற்கும் காலம் தேவை என்பது போன்ற ரீதியில் மிகவும் நாசுக்காகவும், நழுவலாகவும் எழுதப்பட்டுள்ள கடிதம் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டில் நின்று புலிகள் பதில் தெரிவிக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பான முடிவானது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களாலும், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கும் இடையிலான மந்திராலோசனையின் போது எடுக்கப்படும் என எதிர்பார்க்கலாம். இம்முடிவே இவ்வாரத்தில் வன்னியில் நடைபெறவுள்ள இராஜதந்திர செயற்பாட்டிற் கெல்லாம் அடிப்படையாக அமையக் கூடியதாக இருக்கும்.

வன்னியில் இவ்வாரத்தில் நடைபெறவுள்ள முக்கிய இராஜதந்திர செயற்பாடாக அமைய இருப்பது யப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளமையே ஆகும். இச்சந்திப்பில் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தையும், டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்கு பற்ற வேண்டிய தேவைகளையும் யசுகி அகாஷி வலியுறுத்துவர் என எதிர்பார்க்கலாம்.

இதற்கான சமிக்கைகளை யசுகி அகாஷி ஏற்கனவே வெளிக்காட்டவும் தொடங்கியுள்ளார். சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இரு நாட்களின் முன்பு சந்தித்த போது பத்திரிகையாளர்களிடம் பேசிய யசுகி அகாஷி "டோக்கியோ மாநாடு சிறிலங்கா அரசிற்கு மட்டுமல்ல, விடுதலைப் புலிகளுக்கும் முக்கியமானதே" எனத் தெரிவித்துள்ளமையைச் சுட்டிக்காட்ட முடியும். இதேவேளை யப்பான் புனர்வாழ்வு. புனர் நிர்மாணத்திற்கென வழங்க முற்படும் நிதி உதவியினை சமாதான முயற்சிகளுக்கான நிபந்தனை போன்றும்- அதேவேளை ஊக்குவிப்புப் போன்றும் காட்டிக் கொள்ள யப்பான் விசேட தூதுவர் முனையக்கூடும்.

இதேவேளை, விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்தியதில் நியாயப்பாடு எதுவுமில்லை என்பது போன்றதொரு நிலைப்பாட்டை அவர்கள் வெளிப்படுத்தப்போவதுமில்லை. ஆயினும், டோக்கியோ மாநாடு பல நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என்ற ரீதியில் 'பொருளாதாரப் பிரச்சினைகளை' மையப் பொருளாக்கி இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடும்.

இதேவேளை, விடுதலைப்புலிகள் புரிந்துணர்வு உடன்பாட்டில் அரசாங்கம் நிறைவேற்றாத பணிகள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாமல் நிலைமை நீடிப்பது, மற்றும் உயர் பாதுகாப்பு வலயம், கடற்படையினரின் அத்து மீறல்கள், நடவடிக்கைகள் போன்றவை தொடர்பாகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதில் கடிதம் தொடர்பாகவும் யசுகி அகாஷியுடன் பேச்சுக்களை நடத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், எத்தகைய விடயங்கள் பேசப்பட்டாலும், இச்சந்திப்பின் போது, டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்கேற்பது, அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் பங்கேற்பது தொடர்பான தீர்மானங்களுக்கான மார்க்கத்தில் இராஜதந்திர செயற்பாடுகள் அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்க முடியும்.

இந்த வகையில், இவ்வாரமானது சமாதான முயற்சிகள் குறித்து முக்கிய இராஜதந்திரப் பணிகள் கொண்டவாரமாகவே இருக்கும். மேலும் சிறப்பாகக் கூறுவதானால், புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்பட்ட 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மூன்றாம். நான்காம் வாரத்திற்குப் பின்னர், சமாதான முயற்சிகளில் முக்கியத்துவம் பெறப்போகும் வாரமாகவும் இதனைக் கொள்ளலாம். ஏனெனில், சமாதான முயற்சிகள் குறித்து இவ்வாரத்தில் முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

-ஜெயராஜ்-

# இயல்பு வாழ்வுக்கு ஊறுவிளைவிக்கும் புதிய படைமுகாமை ஏற்க முடியாது

## யாழ். மாவட்ட வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

**புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முற்றிலும் முரணானவகையில் யாழ்ப்பாண மக்களின் இயல்பு வாழ்வுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் புதிய படை முகாம் கோட்டைப்பகுதியில் அமைவதை யாழ். மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வாறு யாழ். மாவட்ட வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு அனுப்பிவைத்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அம்மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

சிறிலங்கா அரசுக்கும் விடு தலைப்புலிகளுக்கும் இடையே 22.02.2002 அன்று கைச்சாத் தான புரிந்துணர்வு உடன்படிக் கையின் அடிநாதமாக விளங்கிய போர் நிறுத்தம் மற்றும் இயல்பு வாழ்க்கை என்பன மிகவும் முக் கியத்துவம் பெறுகின்றன. அத் துடன் மக்கள் வாழ்விடங்களில் இருந்து இராணுவ முகாம்கள் காவலரண்கள் என்பன குறிப் பிட்ட கால வரையறைக்குள் அகற்றப்படாது இருப்பதை நாம் காண்கிறோம். அதேவேளை இவ் உடன்பாட்டை மீறும் வகையில் யாழ். கோட்டைப்பகுதியில்புதிய இராணுவ முகாம் ஒன்று அமைக் கப்பட்டுவருகிறது.

புரிந்துணர்வு உடன் பாட்டுக்கு முற்றிலும் முரணான வகையில் யாழ்ப்பாண மக்களின் இயல்பு வாழ்வுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் புதிய படைமுகாம்அமைவதை யாழ்ப் பாணம் மற்றும் தீவக மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள வில்லை. இது குறித்து யாழ்ப் பாண பொது அமைப்புக்கள் அரசியல் கட்சிகள் என்பன தமது எதிர்ப்பைக் காட்டி உள்ளன. சக அமைப்புக்கள் தங்கள் தொடர் போராட் டங்களை நடத்தத் தீவிர மாக ஆராய்ந்து வருகின்றன. ஆதலால் யாழ். கோட்டைப் பகுதியில் எங்குமே புதிய இராணுவ முகாம், காவலரண் என்பன அமைக்கப்படுவதை நிறுத்த வேண்டுகின்றோம். இதற்கான காரணங்களையும் கீழே தருகிறோம்.

அனைத்து தீவகமக்களின் நுழைவாயிலில் இப்படை முகாம் அமைவதால் என்றுமே தீவகமக்களின் இயல்பு வாழ்வு நிலைக்கு அச்சுறுத்தலாகும்.

எதிர்கால யாழ். மாநக ரத்தை நவீனமயப்படுத்தும் திட்ட அமைவிடங்கள் கோட் டைப்பகுதியை' அண்டிய இடங் களில் உள்ளன. இப்புதிய படை முகாம் அமைவதால் இத் திட்டங்கள் சீர்குலைந்து விடும் ஆபத்துண்டு. பெருவி ழாக்கள். பெருங்கூட்டங்கள் நடத்துவதற்குரிய வரலாற்று பெருமைக்குரிய யாழ். முற்ற வெளி மைதானமும் மக்கள் பயன்பாட்டிற்கு தடைசெய்யப் படும்அபாயம் உள்ளது.

புனரமைக்கப்படும் பொது நூலகம் மக்களால், மாணவர்க ளால்,கல்வியாளர்களால் கல்வித் தேவைகளுக்குப் பயன்படாது இராணுவ அச்சுறுத்தலால் இழக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. மீன்சந்தை மற்றும் ஏனைய சந்தைகள் கோட்டைப்பகுதியின் வீதியில் அமைந்துள்ளன. இத னால் சந்தை வாய்ப்பைத் தேடி வரும் உற்பத்தியாளருக்கு இது பெரும் பாதிப்பாகும்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை, யாழ். பல நோக்கு கூட்டு றவுச் சங்கம் போன்ற கட்டடங் களில் அரச திணைக்களங்கள் இயங்குகின்றன. இப்பகுதிக்கு தினமும் ஆயிரக்கணக் கான மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்ய வருகிறார்கள் இப்படைமுகாம் அமைவது அத்தியாவசிய கடமைக்கு பெரும் அச்சுறுத்தலாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அரசுக்கும் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை தொடர்ந்து நிரந்தரசமாதானம், நிரந்தர அரசியல் தீர்வு ஏற்பட்டு இயல்பு வாழ்வுநிலை தோன் றிடவேண்டுமானால் புரிந்துணர்வு உடன்பாடு அமுல்படுத்தப்பட வேண்டும். ஆதலால் அனைத்து எதிர்பார்ப்புகளுக்கும் தடையாக இருக்கும் இவ் இராணுவ முகாம் அமைப்பு காவலரண் அமைப்பு போன்ற வற்றை நிறுத்துமாறு கோருகிறோம் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

(புதுக்குடியிருப்பு

மல்லிகைத்தீவு, ஆனந்த புரம், சிவநகர், மந்துவில் ஆகிய நான்கு கிராமங்களின் தேசிய எழுச்சிப் பேரவைக் கூட்டம் உதவி அரசாங்க அதிபர் பணி மனையில் புதுக்குடியிருப்பு பிர தேசப் பொறுப்பாளர் தலைமை யில் நடைபெற்றது.

இதில் கிராமிய அபிவிருத்தி சம்பந்தமாகச் சிறப்புரையினை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தயானந்தா நிகழ்த்தினார். நன்றியுரையினை புதுக் குடியிருப்புக் கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் நா. சண்முகநாதன் நிகழ்த்தி னார். (26)

## வட.மா.ப.தெ.வ. அபிவிருத்தி

## கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் 1097 பேருக்கு நிதியுதவி

(அலுவலக செய்தியாளர்)

வடமாகாணபனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங் கங்களின் பேரிணையத்தினால் கடந்த ஏழுவருட காலத்தில் 1097 அங்கத்தவர்களுக்கு விபத்துக் கொடுப்பனவு வழங்கப் பட்டுள்ளது.

மேற்படி பேரிணையத்தின் கீழ் தொழில் புரியும் அங்கத்தவர் களின் நலன் கருதி உருவாக் கப்பட்ட விபத்துக்கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் தொழில் செய்யும் காலத்தில் விபத்து ஏற்படுதல் மற்றும் தொடர்ச் சியாகத் தொழில் புரிந்து ஓய்வு பெறுவோர், தொழில் புரிந்து மரணம் அடைந்தோர் ஆகியோ ருக்கே இக்கொடுப்பனவு வழங் கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் குறுகிய கால இழப்பாக 673 பேரும் மத்திய கால இழப்பாக 131 பேரும், நீண்ட கால இழப்பாக 29 பேரும், நிரந்தர இழப்பாக 19 பேரும், மரணம் சம்பவித்த 62 பேரும், ஓய்வூதியம் பெறு வோர் 183 பேருமாக மொத்தம் 1097 அங்கத்தவர்களுக்கே 33,99,517 ரூபா பணம் விபத்துக் கொடுப்பனவாகக் கடந்த ஏழு வருட காலத்தில் வழங்கப்பட் டுள்ளது.

பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்துவரும் மேற்படி அங்கத்தவர்களின் எதிர்கா லத்தை கருத்தில் கொண்டு வடமாகாண பனை தென்னை வளஅபிவிருத்திக்கூட்டுறவுச் சங் கத்தால் இத்திட்டம் மேற் கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (லோ)


இதோ பாருங்கள்

# பணிநிலை வெற்றிடம்



சமையலாளர், சமையல் உதவியாளர் போன்ற பணிநிலை களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

தகைமையுடையவர்கள் 2003.05.20ஆம் நாளுக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரில் வருகை தரவும்

தகைமை :- உணவு வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள ஆண்கள் விண்ணப்பிக்க லாம்.

குறிப்பு :- திறமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற ஊதியம் வழங்கப்படும்



நடுவப்பணியகம்
ஆயப் பகுதி,
கிளிநொச்சி.



(சி-8101)

### சிந்தனைக்கு

நாம் யாரையும் ஏமாற்றவும் இல்லை. துரோகம் இழைக்கவும் இல்லை. ஆனால் எம்மை யாரும் ஏமாற்றினால், அல்லது எமக்குத் துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 07-05-2003

## சாத்தியப்பாடானவையே!

"இன்றும் எவ்வளவோ செய்திருக்கலாம் என்று விடுதலைப் புலிகள் கூறுவது சரியென்றே நான் கருதுகின்றேன்" என்ற நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்ஹேசன் அவர்களின் கூற்றுக்கள் அவர் இலங்கையின் தற்போதைய நிலவரங்கள் நன்கு மதிப்பீடு செய்துள்ளார் என்பதன் வெளிப்பாடாகவே கொள்ளத்தக்கதாகும்.

விடுதலைப்புலிகள் இயக்கம் சிறிலங்கா அரசாங்கத்திடம் நிறைவேற்றப்பட முடியாத கோரிக்கைகளையோ அன்றி புதிய புதியதான கோரிக்கைகளையோ எதனையும் முன்வைக்கவில்லை. நடைமுறையில் சாத்தியமான அதேவேளை புரிந்துணர்வு உடன்பாட்டின்பிரகாரம் நிறைவு செய்யப்பட வேண்டிய கோரிக்கைகளையே விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ளனர்.

எடுத்துக்காட்டாகக் கூறுவதானால், யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு உட்பட்டதான மீளக்குடியேறுதல் விடயத்தை சுட்டிக்காட்ட முடியும். இதில் அரசாங்கம் செய்யக் கூடியவற்றைக் கூடச் செய்வதாகத் தெரியவில்லை. உயர்பாதுகாப்பு வலயம் என்ற ரீதியில் பிரச்சினைக்கான தீர்வை கிடப்பில் போட்டுள்ளது. அதேவேளை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் எதையும் விரைவுபடுத்துவதாகவும் தெரியவில்லை.

வேறுவிதமாகக் கூறுவதானால், அரசாங்கம் புரிந்துணர்வு உடன்பாட்டினைச் சாதகமாகப்பயன்படுத்தி அனுகூலங்களைப்பெற முயல்கின்றதே ஒழிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பெரும் இன்னலுக்குள்ளான மக்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்வதில் தீவிர அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

அதாவது. உடன்பாடுகள், இணக்கப்பாடுகள் என்பனவற்றில் எதிர்க்கக்கூடிய சிக்கல் நிறைந்தவை நிறைவேற்றப்படுவதற்கு மேலதிகமாகச் சில சுற்றுப் பேச்சுக்களோ உரையாடல்களோ நடத்தப்படலாம். ஆனால் சாதாரண விடயங்கள் நிறைவேற்றப்படுவதற்குக் கோரிக்கைகள் விடுக்க வேண்டியும் போராட்டங்கள் நடத்த வேண்டியும் இருப்பதானது உடன்பாடுகள், இணக்கப்பாடுகள் மீது அரசு காட்டும் அசமந்தப் போக்கையே காட்டுவதாகிறது.

சிங்கள ஆட்சியாளர்கள் வரலாற்று ரீதியாகவே தமிழ் மக்களுக்கு அவநம்பிக்கைக் கொடுப்பவர்களாகவே இருந்து வந்துள்ளனர். ஆகையினால், தமிழ் மக்களுடன் செய்து கொள்ளப்படும் உடன்பாடுகள், காணப்படும் இணக்கப்பாடுகள் என்பன நிறைவேற்றப்படாத பட்சத்தில் அவர்கள் விரைவிலேயே அரசு மீது அவநம்பிக்கை கொண்டவர்களாகி விடுகின்றனர்.

அதிலும் தற்போது விடுதலைப்புலிகளும் – சிறிலங்கா அரசிற்கும் இடையில் எட்டப்பட்டுள்ள உடன்பாடு காணப்பட்டுள்ள இணக்கப்பாடுகள் என்பன சிக்கல் நிறைந்த அதிகாரப் பகிர்விற்கான உடன்பாடோ, இணக்கப்பாடோ அல்ல. மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான புரிந்துணர்வு உடன்பாடே ஆகும்.

இதனை உடன்பாடு ஒன்றின் மூலம் செயற்படுத்த வேண்டி வந்துள்ளது என்பதே கவலைக்குரிய தொன்றாகும். ஏனெனில், ஒரு மக்கள் கூட்டத்தை தனது பிரஜைகள் எனக்கூறிக் கொள்ளும் அரசாங்கம் அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்குத் தயக்கம் காட்டுவதென்பது அம் மக்கள் கூட்டத்திற்குச் செய்ய வேண்டிய கடமையை அரசாங்கம் செய்யத்தவறிவிட்டது என்பதே அர்த்தமாகும்.

அரசியல் விதிமுறைகள் அவ்வாறானதாக இருக்கையில் உடன்பாட்டு ரீதியில் செய்து கொள்ளப்பட்ட கடப்பாடுகளைக் கூட அரசாங்கம் செய்ய மறுப்பதானது அரசாங்கம் தனது சக்திக்குட்பட்ட விடயங்களைச் செய்வதற்குக் கூடப் பின்னடிப்பதாகவே கொள்ளப்படும்.

தமிழ் மக்களின் இன்றைய முக்கியமானதொரு பணியாக மாறிவிட்ட விடயம் உடன்பாட்டிற்கு ஏற்றவையில் நடந்து கொள்ளுமாறு அரசாங்கத்தினைக்கோருவதும் அதற்காகப் போராட்டம் நடத்துவதுமே ஆகும். அதாவது உரிமைக்காகப் போராடிய மக்கள் தற்போது உடன்பாட்டு சரத்துக்களை அமுலாக்கவேண்டுமெனக் கோரிப்போராட்டம் நடத்த வேண்டியுள்ளது.

ஆனால், உரிமைக்காயினும் சரி, அத்தியாவசிய பொருட்கள், சேவைகளுக்கானதாயினும் சரி எதுவாகிலினும் அரசிற்கெதிரான போராட்டம் என்பது அதன் மீதான அவ நம்பிக்கையை வளர்க்கக் கூடியதேயாகும். ஆகையினால், ஆட்சியாளர்கள் முதலில் நிறைவேற்றக்கூடியவற்றையாவது நிறைவேற்ற முயலவேண்டும். அதுவே சமாதானம் வளர்ச்சி காணவும், நம்பிக்கை வளர்த்தெடுக்கப்படும் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பமாகும்.

# முகத்தை மூடியவாறு வந்தவர்களில் ஒருவர் வாக்குப்பெட்டியைத் தூக்கினார்

## - உடத்தலவின்னப் படுகொலை வழக்கில் சாட்சியம்

(கொழும்பு)

கண்டி உடத்தலவின்ன வாக்குச் சாவடியில் நின்றிருந்தபோது இராணுவ சீருடையில் முகத்தை மூடியவாறு வந்த இருவர்களில் ஒருவர் வாக்குப்பெட்டியினை எடுத்துச் சென்றதாக உடத்தலவின்ன படுகொலை வழக்கில் சாட்சியமளித்த ஐக்கிய தேசியக்கட்சியின் வாக்குச் சாவடி முகவராக கடமையாற்றிய மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தல் தினத்தன்று கண்டி உடத்தலவின்னப் பகுதியில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கின் விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள்முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையில் மரிக்கார் சாட்சியமளித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

வாக்குச் சாவடியில் கடமையில் இருந்த தான் அருகில் இருந்த தங்கையின் வீட்டுக்குச் சென்றுவிட்டு வெளியே வரும்போது வாகனம் ஒன்றில் துப்பாக்கி ஏந்திய நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி வந்தனர்.

துப்பாக்கிச்சூட்டுச் சத்தத்தைக் கேட்டு ஒன்று கூடிய ஊர்மக்கள் அவர்களைத் தாக்கத் தொடங்கினர்.

இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் வாக்குச்சாவடியில் வாக்களிக்க எவருமே வரவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கணக்காய்வாளர் அதிபர் திணைக்கள ஊழியர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கணக்காய்வாளர் அதிபர் திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

கண்டியில் திராவகவீச்சுக்குள்ளான கணக்காய்வு அத்தியட்சகர் லலித் அம்மன்வலவிற்கு இழப்பீடு வழங்கப்படவேண்டும். திணைக்கள ஊழியர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

அம்மன்வல காயமடைந்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் இதுவரை எந்த இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை என்றும் ஆர்ப்பாட்டக்காரர் கூறியுள்ளனர். ஒரு கோடி ரூபாவை அவருக்கு இழப்பீடாக வழங்கப்பட வேண்டும் என்றும் கணக்காய்வு அத்தியட்சகர் சங்கத்தின் தலைவர் கேரத் அரசாங்கத்தைக் கோரியுள்ளார். எமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் நாட்டிலுள்ள அனைத்து தொழிற் சங்களையும் இணைந்துப் போராட்டம் நடத் தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# வைத்தியர்களின் சம்பள முரண்பாடு; தீர்வின்றேல் நாளை முதல் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

அரச வைத்திய அதிகாரிகளின் சம்பள முரண்பாடுகள் 7ஆம் திகதிக்கு முன் தீர்க்கப்படாவிட்டால் வரும் 8ஆம் திகதி நண்பகல் தொடக்கம் தொடர் வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் கூடிய சங்கத்தின் செயற்குழுவில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கோதாகொடவின் இடைக்கால அறிக்கையின் படி பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள், உதவி வைத்தியர்கள் இடையே காணப்படும் சம்பள முரண்பாடுகள் பற்றியும் தீர்வு எடுக்காமை பற்றியும் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் கரு ஜயசூரிய தலைமையிலான உபகுழு இச்சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும்படி கோரிக்கை விடுத்திருந்ததாகவும் ஏப்ரல் 8ஆம் திகதி சம்பள அளவு குறித்து உபகுழுவுக்கு அறிவிப்பதாகவும் சுகாதார அமைச்சு கூறியிருந்தது. எனினும் நாளை (08ஆம் திகதி) காலக்கெடு முடிவடைவதையடுத்து மேற்படி வேலை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அதிகாரப்பகிர்வு மூலம் பிரச்சினையைத் தீர்க்க முடியாது!

## ஜே.வி.பி.கூறுகிறது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காண முடியாது என ஜே.வி.பி. கூறியுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலம் சமாதானத்தை கண்டு விட முடியாது. சமாதான முயற்சியில் விடுதலைப்புலிகள் ஈடுபடவில்லை.

மாகாண சபைகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சி மேற்கொள்ளப்பட்டு தோல்வியடைந்த நிலையில் அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு ஒன்றைக்காண முடியாது எனவும் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விஜிதகேரத் தெரிவித்துள்ளார்.

# மூன்றாவது டெஸ்டிலும் மே.இந்தியா அவுஸ்திரேலியா அணியிடம் தோல்வி

அவுஸ்திரேலிய மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையே விசுவுளில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றியீட்டி உள்ளது.

இதன்படி நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்திரேலிய அணி மூன்றுக்கு பூச்சியம் என்ற வகையில் முன்னணி வகிக்கின்றது.

நேற்று முன்தின ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 284 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இனிங்ஸில் வெற்றி இலக்கின் எட்டு ஓட்டங்களை ஒரு விக்கெட்டை இழந்து பெற்றது.

ஸ்கோர் விபரம் - அவுஸ்திரேலியா முதல் இனிங்ஸில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 605 ஓட்டங்கள் இரண்டாவது இனிங்ஸில் ஒரு விக்கட் இழப்பிற்கு 8 ஓட்டங்கள்.

மேற்கிந்திய தீவுகள் அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 28 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 284 ஓட்டங்கள்.






சிறிலங்கா - நியூசிலாந்து அணிகளுக்கிடையே கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெறும் டெஸ்ட் போட்டியின் 2வது நாள் ஆட்டத்தின் போது சிறிலங்காவின் பந்து வீச்சாளர் பிரபாத் நிசங்கா நியூசிலாந்து அணித் தலைவர் பிளமிங்கை L.B.W முறையில் ஆட்டமிழப்பு செய்வதற்காக முறையிட்டு செய்கிறார். பிளமிங் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் போருக்குத் திரும்பும் எண்ணம் எமதுஅரசாங்கத்திற்கு இல்லை

## சிறிலங்காப் பிரதமர் ரணில் பாராளுமன்றத்தில் உரை

மீண்டும் போருக்குத் திரும்பும் எண்ணம் எமது அரசிற்கு இல்லை. அத்தோடு விடுதலைப் புலிகள் நிரந்தரமாகப் பேச்சுவார்த்தையிலி



ருந்து விலகவில்லை என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கடிதம் மூலம் எனக்குத் தெரிவித்துள்ளார் என சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். சமாதான நடைமுறைகளின் தற்போதைய நிலை குறித்து பிரதமர் பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே இவ்வாறு கூறியுள்ளார்.

தீர்விற்கான அர்ப்பணிப்பு மீள வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் போர் ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

மனித உரிமைகள் தொடர்பாக முழுமையான ஆவணம் ஒன்றைத் தயாரிக்க புலிகள் இணங்கியுள்ளார்கள். ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையின் மூலம் அதிகாரத்தை பரவலாக்கி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் புலிகளின் இணக்கம் கிடைத்துள்ளது. இவை இரண்டும் சிறந்த உதாரணம்.

மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படமாட்டாது என்ற விடயம் மிகவும் முக்கியமான முன்னேற்றமாகும் என்றார்.

அண்மையில் சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவினர் சிலரும் அரசில் பிரமுகர்கள் சிலரும் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக கூறும் போது இக்குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்ட நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறு பொலிசாருக்கும், பாதுகாப்புத்துறை சார்ந்தோருக்கும் ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு புனரமைப்பில் விடுதலைப் புலிகள் கட்டாயம் பங்காற்ற வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இயல்புநிலை திரும்பினால் அங்கே இராணுவத்தினர் அதிகளவில் இருக்கமாட்டார்கள் ஆனால் மனிதாபிமானக் கவலைகளோடு பாதுகாப்புக் கவலைகளையும் சேர்த்து சீர்தூக்கிப்பார்க்க வேண்டியது அவசியமாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித் தரப்பாகக் கலந்துகொள்வதற்கான வழிவகைகள் குறித்து விவாதிப்பதற்காக முஸ்லிம் குழுவொன்று விரைவில் விடுதலைப்புலிகளைச் சந்திக்கவுள்ளது.

எதிர்வரும் பேச்சுவார்த்தையில் கவனம் போர்நிறுத்த ஒப்பந்த விவகாரத்திலிருந்து அதிகாரப்பகிர்வு விவகாரத்திற்கு நகர இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

அடிப்படையான அரசியல் பிரச்சினைகளுக்கு ஒவ்வொரு கட்டமாக எந்தவழியில் தீர்வு காண்பது அதன் இலக்குகள், இலட்சியங்கள் என்ன என்பது பற்றியும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

ஜப்பானில் நடைபெறவுள்ள மாநாட்டில் ஒட்டுமொத்த இலங்கையின் அபிவிருத்திக்காகவே நிதி கோரப் படும் என பிரதமர் மேலும் தமது உரையில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் பாராளுமன்றத்தில் தனது கருத்துக்களை முன்வைப்பதற்கு முன்னர் புலிகள் அனுப்பிய கடிதத்தையும், அதற்கான பதிலையும் சபையில் சமர்ப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் ரணிலின் உரை மீது உடனடி விவாதம் தேவை

## - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ரர்ஜபக்ஷ

(கொழும்பு)

பிரதமரின் உரைமீது உடனடியாக நாடாளுமன்ற விவாதம் நடத்த வேண்டும் என்று சிறி லங்காவின் எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் பிரதமரின் உரை முடிந்ததும் எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் அவரது வீட்டில் உணவருந்திக் கொண்டிருந்த போது இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரமேஸ்குமார் (வயது 28) என்பவரே காயமடைந்துள்ளவராகும்.

சிறிலங்காவின் படைமுகாம் அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் அந்தப் பகுதியில் விசேட அதிரடிப் படைமுகாம் மற்றும் பொலிஸ் காவல்நிலை என்பன அமைந்துள்ளன.

### இராசிக்குழு...

மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிற்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளார்.

### முன்னாள்...

யில் கூறியுள்ளார்.

இதேவேளை, பி.ஜே.ஜேக்கப் ஏற்கனவே இந்தியாவிலிருந்து கொழும்பிற்கு வந்துள்ளதையும் பிரதமர் உறுதிப்படுத்தியுள்ளதோடு யாழ். குடாநாட்டில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பது தொடர்பாகவும் அங்குள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றியும் இந்தியாவிடமிருந்து ஆலோசனைகள் பெறப்படுகின்றன என்றும் யாழ். நகரிலுள்ள சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் விடுதிகளிலிருந்து படையினர் இடமாற்றம் செய்யப்படுவது பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திற்கு இடையூறாக அமையாது என்றும் யாழ். நகரிற்குள்ளே படைமுகாம் இடமாற்றம் செய்யப்படவுள்ளது என்றும் கூறியுள்ளார்.

### பிரி.தூதுவர்...

றை மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்த பின் தூதுவர் இந்த மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது அமைச்சில் சந்தித்து உரையாடிய போதே தூதுவர் இவ்வாறு மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை பேணப்பட வேண்டிய அவசியம் குறித்தும் பிரித்தானியத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

### சர்வதேச...

விசேட தூதுவர் அகாஷி கிழக்கு மாகாண நிலைமைகளை அறிவதற்காக மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கு நேற்று விஜயம் செய்துள்ளார்.

ஜப்பானிய விசேட தூதுவருடன் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் ஒட்சுகா கிழக்கு அபிவிருத்தி அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப்ஹக்கீம், வீடமைப்புப்பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத், திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்றிருந்தனர்.

மட்டக்களப்பில் மாவட்ட முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்த ஜப்பானியத் தூதுவர் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடினார்.

பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்டத்தலைவர் கண்காணிப்புக்குழுவின் அரசதரப்பு பிரதிநிதி அருட்தந்தை மில்லர் ஆகியோரையும் சந்தித்து மாவட்ட நிலவரங்களைக் கேட்டறிந்தார்.

### புலிகள்..

இதில் புலிகள் தரப்பில் மட்டு அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ், மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா, தளபதி ஸ்ரான்லி, நிர்வாகப் பொறுப்பாளர் நீலராஜ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

முஸ்லிம்கள் தரப்பில் எம்.ஐ.எம். மொகைதீன், ஏ.ஐ.எம்.ஐ.மீல், எம்.ஏ. முசீல் லெப்பை, ஐ.எம்.இப்ராகிம், எஸ்.முத்துமீரான், எம்.எம்.ஏ.கரீம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

### தமிழீழத்தேசியத்...

திகயோ ஜமாடா, கோஜி, யாகி, மசதமி ஒகோவா,நகுகி ஸொமோலோ, எஸ்.ஏ எஸ் டெவத்தா ஸ்ராவா ஆகியோர் யப்பானியக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடன் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள், திருமதி அடேல் பாலசிங்கம் அவர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த் தைகள் இடைநிறுத்தப்பட்டமை குறித்தும், அப்பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது குறித்தும், பேசப்படுவதோடு, சிறிலங் காப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கு எழுதியுள்ள கடிதம் குறித்து விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்து பேசப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், யூன் மாதத்தில் டோக்கியோவில் நடைபெறவுள்ள சிறிலங்காவுக்கு உதவிவழங்கும் மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்வது குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றியும். பேசப்படலாம் என எதிர் பார்க்கப் படுகின்றது. அத்தோடு இம்மாநாட்டில்கலந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகளை அகாஷி வெளியிடுவார் எனவும் தெரிய வருகின்றது.

பின்னர் இக்குழுவினர் நடமாடும் மருத்துவ சேவைகளையும் கிளிநொச்சி மருத்துவ மனையினையும் சென்று பார்வையிடவுள்ளனர். (பா)

## தவறிவிட்டது

03-05-2003 அன்று காலை புதுக்குடியிருப்பில் இருந்து முகமாலைக்குச் செல்லும் பஸ்சில் பயணம் செய்த போது விசுவமடுவுக்கும் பரந்தனுக்கும் இடையில் கணக்குகளைப் பதிவு செய்த CR கொப்பி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அண்மையில் உள்ள கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

(3188)

# கோட்டைப் பகுதியில் முகாம்; நடவடிக்கை தொடர்கின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டைப் பகுதியில் படைமுகாம் அமைக்கும் முயற்சியில் சிறிலங்காப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

படையினரின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியதும் பிரதமருக்கு மகஜர்கள் அனுப்பி வைத்திருந்ததும் தெரிந்ததே. எனினும் இம்முயற்சியைப படையினர் தொடர்ந்து வருகின்றனர்.

படையினரின் இந்த முகாம் அமைக்கும் முயற்சிகளை உடன்நிறுத்தாது விட்டால் பெரியளவில் தொடர் போராட்டங்கள் நடத்தப்படுமென பொது அமைப்புக்களும், மாணவர் அமைப்புக்களும் எச்சரிக்கை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# ஐரோ. யூனியன் பா.உ. மட்டக்களப்பு விஜயம்!

## - பலதரப்பினருடன் சந்திப்பு

(மட்டக்களப்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன்குஸ்கைன் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

மட்டு.இல் 23.3 ஆவது படைப்பிரிவு தலைமையகம் இயங்கிவரும் மட்டு. மாநகர சபைக் கட்டடத்திலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன்குஸ்கைன் பலரைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

மட்டு. படைத்துறை கட்டளை அதிகாரி ராஜிதடிசில்வா, சமாதானக்குழு, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள், ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், ஈ.பி.டி.பி. பிரதிநிதிகளும் அத்தோடு நியாப் திட்டப்பணிப்பாளர், நிக்கொட் திட்டப் பணிப்பாளர், மற்றும் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## கொழும்பு அமெரிக்கத் தூதரகத்தில்

# விசா மோசடி தொடர்பாக மேலும் மூவர் கட்டாய லீவில்

(கொழும்பு)

கொழும்பில் அமெரிக்கத் தூதரகத்தில் பணிபுரிந்தவர்களில் மேலும் மூவர் விசா மோசடி குறித்து கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளனர்.

சிறிலங்காவைச் சேர்ந்த இம் மூவர் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும் முகமாக அமெரிக்கத் தூதரகம் சிறிலங்கா குற்றப் புலனாய்வுப் பொலிசாரின் உதவியையும் நாடியுள்ளது.

இந்த விசா மோசடி குறித்து தூதரகத்தில் கடமையாற்றிய இரண்டு அமெரிக்கர் உட்பட ஆறு பேரை அமெரிக்கப் பொலிசார் கைது செய்து கலிபோர்னிய நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்

நிலஅளவையாளர் (LAND SURVEYOR) பயிற்சிக்கான

## விண்ணப்பங்கோரல்

நில அளவையாளராவதற்கான பயிற்சி கீழ்க்காணும் தகைமையுடையோரிடமிருந்து தெரிவு செய்யப்படுவோருக்கு வழங்கப்படவுள்ளது. ஆர்வமுடையோர் சுயவிபரத்துடன் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி** :- 31.05.2003

1) **தகைமைகள்** :-

அ) க.பொ.த. (சா/த) கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ஆ) ஏதாவது தொழில் நுட்பக்கல்லூரியில் நில அளவை / தொழில் நுட்பம் /படவரைகலை போன்ற ஏதாவது ஒன்றில் அடிப்படைப்பயிற்சி பெற்றிருப்போர்.

இ) அல்லது வேறு ஏதாவது உயர்தர கல்வித்தகைமையுடையோர் அல்லது இதற்கு சமமான கல்வித்தகைமையுடையோர் (கணினிப்பயிற்சி உட்பட)

2) **அகவை** :- 18 தொடக்கம் 25 வயதிற்கு மேற்படாதோர் (ஏதாவது பணியிலுள்ளோரின் அகவை 28 வயதிற்குட்பட்டிருப்பின் பரிசீலிக்கப்படும்.)

3) **பால்** :- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

4) **பயிற்சிக்காலம்** :- இரண்டு (2) வருடம்

5) நேர்முகப்பயிற்சிக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

6) பயிற்சிக் காலத்தின்போது தங்குமிட, உணவு வசதிகள் வழங்கப்படும்.

7) பயிற்சியின் முடிவில் தகுதி காண்போருக்கு நில அளவையாளருக்கான பணி வழங்கப்படுவதுடன், நடைமுறையில் உள்ள அரச சம்பளத்திட்டத்தின் படி சம்பளம் கொடுக்கப்படுவதுடன் 5 வருட திருப்தி கரமான பணியின் முடிவில் தகுதியுடையோருக்கு நில அளவைப் பொறுப்பாளரின் தீர்மானப்படி தமிழீழத்தில் தனிப்பட்டமுறையில் பணியாற்றக்கூடிய நில அளவையாளருக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

**முகவரி:-**
**பொறுப்பாளர்,**
**நிலஅளவைப்பிரிவு,**
**மே/பா,ஈழநாதம்பணிமனை,**
**யாழ்சாலை, கிளிநொச்சி.**

**பொறுப்பாளர்,**
**நிலஅளவைப்பிரிவு,**
**தமிழீழம்.**

(ச-8108)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 07ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.